RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijmrd2643

INDIAN JOURNAL OF MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

The Concept of Virtue According to Pandithar A. Krishnasamy Naidu

V. Vignesh [a, *]

[a] Department of Tamil, PSG College of Arts and Science, Coimbatore-641014, India

*Corresponding author Email: vignesh@psgcas.ac.in

DOI: https://doi.org/10.54392/ijmrd2643

Received: 01-09-2026; Revised: 28-10-2026; Accepted: 04-11-2026; Published: 12-11-2026

Abstract: Thiruvalluvar Kaviyam, a distinctive Tamil epic composed in the twentieth century by Pandithar A. Krishnasamy Naidu of Coimbatore, presents an imaginative literary interpretation of ethical and social ideals. The work incorporates the structural elements of an epic as outlined in Dandiyalankaram and reflects the author's engagement with contemporary political and social ideologies, particularly self-rule (Swaraj), democracy, Mahatma Gandhi's principle of non-violence (Ahimsa), and Jawaharlal Nehru's concept of socialism. Influenced by egalitarian ideals, Naidu envisions a society free from caste and religious discrimination, emphasizing social equality and collective welfare. His commitment to virtue (aram) forms a central dimension of the epic and provides the foundation for his vision of an ethically transformed society. This study examines the concept of virtue as articulated through Pandithar A. Krishnasamy Naidu's Thiruvalluvar Kaviyam. It focuses on the author's ethical principles, his understanding of social justice, and the relationship between individual morality and collective social responsibility. Particular attention is given to the ways in which the epic integrates virtue with ideals of non-violence, equality, human dignity, and social harmony. The study also explores how the author's literary imagination transforms contemporary reformist and political ideas into an ethical framework grounded in Tamil intellectual tradition. The study argues that Thiruvalluvar Kaviyam presents virtue not merely as an individual moral obligation but as a fundamental principle for establishing an egalitarian and harmonious society. Through this interpretation, Pandithar A. Krishnasamy Naidu connects the ethical legacy associated with Thiruvalluvar with modern ideals of democracy, socialism, and social equality. Thus, the study highlights the significance of his ethical vision and its contribution to the development of modern Tamil social and moral thought.

Keywords: Thiruvalluvar Kaviyam, Krishnasamy Naidu, Thiruvalluvar, Ethical and social ideals

Language: **Tamil**

பண்டிதர் அ. கி. நாயுடு அவர்களின் நோக்கில் அறக்கோட்பாடு

வே. விக்னேசு [அ, *]

[அ] தமிழ்த்துறை, பி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641014, இந்தியா,

முன்னுரை

அ.கி.நாயுடு என்று தனியன்போடும் பெருமதிப்போடும் தமிழ்கூறும் நல்லுலகால் அழைக்கப்பெறும் கோயம்புத்தூர் பண்டிதர் அ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள், திருவள்ளுவரைத் தலைவராகக் கொண்டு திருவள்ளுவர் காவியம் இயற்றியவர். தமிழர் சமுதாயம், எல்லாச் சமுதாய அமைப்புகளுக்கும் முன்னையது தனிச்சிறப்புடையது என்பதைத் தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம் என்னும் ஆராய்ச்சிப் பெருநூல் வழி நிறுவியவர். கவிச்சக்கரவர்த்தி கம்பர் வரலாறு, கம்மவாரும் தென்னாடும், நால்வகைப் பாவும் பாவைநோன்பு வரலாறும், திருபகவன் கீதை உண்மைப்பொருள், பூளைமேடு வரலாறு என்னும் நூல்களைப் படைத்தவர். இரதபந்தம் இயற்றுவதில் வல்லவர். உள்ளம் நினைப்பதை வெண்பாவால் வெளியிடும் ஆற்றல் பெற்றவர். இத்தகு சான்றோர் அரிதின்முயன்று இயற்றிய திருவள்ளுவர் காவியத்தின் வழி வெளிப்படும் அன்னாரின் அறம் குறித்த கோட்பாடுகளை வெளிக்கொணரும் முகத்தான் எழுந்ததே இக்கட்டுரை.

திருவள்ளுவர் காவியம்

அல்லன மறுத்து நல்லன ஏற்றுத் தெளிந்த உண்மைகளை எழுதும் திறனும் உரனும் பெற்றிருந்த அ.கி. நாயுடு அவர்கள், 1940-ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே 'காப்பியம்' இயற்ற வேண்டுமென்ற வேணவா இருந்து வந்தது. இவ் அவாவின் மேலீட்டால் உலகச் சான்றோர் திருவள்ளுவரைத் தலைவராகக் கொண்டு அரும்பெருங் காப்பியமொன்று இயற்றலானார். பதினெட்டாண்டுகள் அரும்பாடுபட்டு கப்பியத்தை இயற்றி முடித்து, 1958-ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் பீளமேட்டில் அரங்கேற்றினார். இங்ஙனம் அரிதின்முயன்று இயற்றிய காப்பியமே 'திருவள்ளுவர் காவியம்' என்னும் பெயரினதாம்.

காவிய அமைப்பு

திருவள்ளுவரைக் காப்பியத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்ட திருவள்ளுவர் காவியம் 5 காண்டங்களையும் 104 படலங்களையும் 4030 வெண்பாக்களையும் கொண்டது. காவியத்தொடக்கத்தில் 23 பாயிரச் செய்யுட்களையும் கொண்டது. கல்விக்காண்டம் 12 படலங்களையும் 215 செய்யுட்களையும்; யாத்திரைக்காண்டம் 84 படலங்களையும் 751 செய்யுட்களையும்; முப்பால்காண்டம் 18 படலங்களையும் 518 செய்யுட்களையும்; உரிமைக்காண்டம் 26 படலங்களையும் 988 செய்யுட்களையும்; அமைதிக்காண்டம் 25 படலங்களையும் 1449 செய்யுட்களையும் கொண்டுள்ளன.

இக்காவியத்திலுள்ள பாக்களனைத்தும் வெண்பாக்களால் இயன்றதாகும். வேண்டுழியெல்லாம் திருக்குறளைப் பொருத்திக் காட்டுதற் பொருட்டே வெண்பாக்களான் இக்காவியம் இயற்றியதை,

"பாவினத்தால் பாட்டியற்றும் பண்பிருந்தும் பாடரிய

தேவினித்த வெண்பாவில் செய்தனன் நூல் - காவியத்தில்

முப்பால் முழுக்குறளை அங்ஙனே வைத்த்தற்காம்

அப்பால் கருத்தமைதி ஆய்த்து" - (திருவள்ளுவர் காவியம். பாயிரம். பா.22)

என்னும் பாயிரச்செய்யுளான் இந்நூலாசிரியர் இயம்புகின்றார் (Krishnasamy Naidu, 1958).

ஈதலறம்

சொத்துரிமையும், முடிமன்னராட்சியும் ஏற்பட்ட பின்னர் சமூகத்தில் இல்லாமை ஒருபுறமும், செல்வக்குவிப்பு மறுபுறமும் இருந்தநிலையில்தான், புலவர்கள் ஒப்புரவையும், ஈகையையும் வலியுறுத்திப் பாடினர். செல்வக்குளிப்பை எதிர்த்துப் போராடும் அளவிற்குத் துணிவோ, ஆதரவோ இல்லாத நிலையில், 'செல்வத்துப் பயனே ஈதல்' எனச் செல்வர்களிடம் வற்புறுத்தும் நிலை தோன்றியது.

"தென்கடல் வளாகம் பொதுமையின்றி

வெண்குடை நிழற்றிய ஒருமையோர்க்கும்

நடுநாள் யாமத்துப் பகலுந் துஞ்சான்

கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்

உண்பது நாழி உடுப்பவையிரண்டே

பிறவும் எல்லாம் ஓரொக்கும்மே

செல்வத்துப் பயனே யீதல்

துய்ப்போ மெனினே தப்புந பலவே" (புறம்:189)

என்பதனான் மனிதவாழ்வின் அடிப்படைத் தேவைகளாகிய உண்பதும், உடுப்பதும் அரசனாயினும், ஆண்டியாயினும் பொதுவே என வற்புறுத்தினர் நக்கீரனார் (Swaminathaiyar, 1956).

அறம் தோன்றிய விதம்

பண்டிதர் அ.கி. நாயுடு அவர்கள் தாம் இயற்றிய திருவள்ளுவர் காவியத்தில் வள்ளுவனார் படைத்த சமதருமச் சமுதாயத்தில்,

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பலறி யாமுன்

வகுத்த பொருணூலார் வந்து - மிகுத்தறம்

ஈந்திடச் செய்தனர்; ஈட்டுபொருள் மிக்கிடில்

ஏய்ந்தசமன் செய்திடல் என்று." - (திருவள்ளுவர் காவியம் 4;5;27)

"ஒழுக்கத்தை ஓம்பும் உறுதிமணம் நில்லான்

வழுக்கி விழுதல் மறக்க - இழுக்கில்

கழுவாயென் றீதலறம் கற்றோர் வகுத்தார்;

எழுவார் ஒழுக்கத்தி லென்று." - (தி.கா. 4;5;28)

என்னும் கவிகளின்வழி, பகுத்துண்டு வாழ்தலை அறியாமுன், பொருள்நூலார் அனைவருக்கும் சரிசமமாகச் செல்வம் இருக்கும் பொருட்டு அறத்தை வலியுறுத்தினர். ஒழுக்கத்தினின்று வழுவிய ஒருவனுக்கு, அந்த இழுக்கிற்குக் கழுவாயாகக் கற்றோர் அறத்தை வலியுறுத்தினர் என்று அறம் தோன்றிய விதங்கள் குறித்துக் கூறுகின்றார் (Krishnasamy Naidu, 1958).

திருவள்ளுவர் காவியச் சமதருமச் சமுதாயத்தில், பற்றுள்ளம் கொண்ட செல்வர்களிடம், அன்பாகக் கூறியும், அச்சுறுத்தியும் அறத்தினை வலியுறுத்தினர் என்பதை,

"பற்றுள்ளம் கொண்ட இவறல் பணமுடையான்

உற்றுள்ள தீதற் கொருவழியைத் - தெற்றென

அன்புறுத்தி, அச்சுறுத்திப் பாத்த தறத்தோற்றம்

முன்புலகில் வந்த முறை." (தி.கா.4;5;29)

இக்கூறியதான் அறியவியலும். அன்றியும், செல்வரிடமிருந்து வறியவர்க்குச் செல்வம் வரும் வழியாகப் பண்டிதரவர்கள் அறத்தைக் காண்கிறார் (Krishnasamy Naidu, 1958).

அரணாகும் அறம்

ஒருவர் பணத்தை மலைபோலக் குவித்து வைத்துக்கொண்டு, பசியென வந்து இரப்பவர்க்கு இல்லை என்று சொல்வார்கள் எனின், அவர்கள் வெகுண்டெழுந்து, பணத்தைப் பறிக்கமுயல்வர். அவர்களை அவ்வாறு வெகுண்டெழுந்து சீறாவண்ணம் காப்பது அறமாகும். இவ்விடத்து அறம் அரணாகின்றது என்னும் பண்டிதரவர்களின் கருத்து,

"மலைபோல் பண்மகுவித்து மாளு பசியாளர்க்

கிலையென் றிருமாந் திருப்பின் - அலைபோலப்

பொங்கிப் பசியாளர் பொல்லாப் பணமூட்டை

முங்கிப் பறிப்பர் முனைந்து." - (தி.கா. 4;5;29)

என்ற பாடல்வழி புலனாம் (Krishnasamy Naidu, 1958).

அறம் வாணிபமாதல்

"ஈதலறம் என்பதுபவே ஈட்டிய தம்பொருளை

ஆதர் பறிக்கா அரணாகும்: - போதிய

வாணிகமும் ஆகும்; வழங்குவோர் உட்கருத்தை

நாணுவர்; காணின் நகைத்து." - (தி.கா. 4;5;30)

என்னுமாற்றான், உட்கருத்து ஒன்று வைத்து ஒருவர்க்கு ஒன்று ஈயுங்கால் அறம் வணிகமும் ஆகின்றது என அறம் வணிகமாதல் குறித்துக்கூறுகின்றார் பண்டிதர் அ.கி. நாயுடு அவர்கள் (Krishnasamy Naidu, 1958).

அறம் செய்யாதாரும்; ஈதல் கருத்தும்

வணிகர் அறம் செய்யார்; அவர் அறம் செய்தாலும் அதுவும் வணிகமாம் என்பதை,

"வணிகனறம் செய்யான்; வணிகனறம் செய்யான்;

வணிகனறம் செய்யின் வணிகம் - பணிவுளத்தில்

ஈவதுபோல் ஏற்றுப்பின் ஈந்ததற்குக் கைக்கூலி

ஆவதென்றென் றாய்வான் அகம்" -(தி.கா. 4;5;32)

என வணிகர் செய்யும் அறத்தில் உள்நோக்கத்தைக் வெளிப்படுத்துகின்றார் பண்டிதர் (Krishnasamy Naidu, 1958). அன்றியும், மன்னன் செய்யும் அறத்தின் நோக்கம், மன் மரபை மன்னுலகில் நிலைக்கச் செய்தற்கேயாகும் என்பதை,

"மன்னன் அறம்செய்யான்; மன்னன் அறம்செய்யான்;

மன்னன் அறமஎய்யின் மன்மரபு - மன்னுலகில்

மன்னவெனச் செய்வான்; மற்றும் அடிமையினில்

துன்னிமக்கள் வீழச்செய் சூழ்வு." -(தி.கா. 4;5;33)

எனச்சாற்றும் பண்டிதர், வறியார்க்கொன்றீவதே ஈகை, மற்றெல்லாம் அறியாதவர்கள் அறம் என்று எண்ணுமாறு செய்து, தம்முடைய பட்டம், பதவி, புகழ் ஆகியவைற்றைப் பெறுவதற்கான குறியெதிர்ப்பை உடையதாம் எனப் பகர்வர். இதனை,

"வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்

அறியார் அறமாய் அறையத் - திறமாய்ப்

பறித்துப் பதவிபுகழ் பட்டம் பெறூஉம்

குறியெதிர்ப்பை நீர துடைத்து." -(தி.கா.4;5;34).

எனுஞ்செய்யுள் சாற்றும்

தவிர, ஈதலின் நோக்கம் குறித்துக் கூறுங்கால், பாவத்தால் ஈட்டும் பொருளைத் தாம்செய்த பாவத்தை மறைக்கும் பொருட்டுச் சிலர் அறம் செய்வர் என்றும் அவர்தாம் வள்ளல் என்று பெயர் பெற்றுச் செய்த பாவத்தை மறைப்பரென்பதனை,

"பாவத்தா லீட்டுபொருட் பாவம் மறத்தற்காய்

ஓவலறப் போர்வையின் உள்மறைந்து - மேவுபெரும்

வள்ளலெனும் பேர்பெறவே வாரிக் குவிக்கும்

கள்ளமே ஈதல் கருத்து." - (தி.கா.4;5;35).

எனவருஞ் செய்யுளான் அறுதியிட்டுக் கூறுவர் பண்டிதர் (Krishnasamy Naidu, 1958).

முடிவுரை

இதுகாறுங்கூறியவற்றான் அடியிற்கண்ட கருத்துக்கள் பெறலாகின்றன. தொடக்கத்தில் அறமானது, செல்வத்தைச் சமநிலைப்படுத்துவதற்காகத் தோன்றியது. திருவள்ளுவர் காவியச் சமதருமச் சமுதாயத்தில், ஒழுக்கத்தினின்று வழுவிய ஒருவனுக்கு, அந்த இழுக்கிற்குக் கழுவாயாகக் கற்றோர் அறத்தை வலியுறுத்தினர். பற்றுள்ளம் கொண்ட செல்வர்களிடம், அன்பாகக் கூறியும், அச்சுறுத்தியும் அறத்தினை வலியுறுத்தினர். உட்கருத்து ஒன்று வைத்து ஒருவர்க்கு ஒன்று ஈயுங்கால் அறம் வணிகமும் ஆகின்றது. மன்னன் செய்யும் அறத்தின் நோக்கம், மன் மரபை மன்னுலகில் நிலைக்கச் செய்தற்கேயாகும். செய்த பாவத்தை மறைக்கவும், பட்டம், பதவி, புகழ் முதலியவற்றைக் காத்துக்கொள்ளவும் அறம் பயன்படுத்தப்பட்டது. அன்றியும், திருவள்ளுவர் காவியத்தில் பண்டிதரவர்கள் உருவாக்கிக் காட்டும் சமதருமச் சமுதாயத்தில் அனைவரும் சமமாகக் கருதப்பட்டனர். செல்வர், வறியவர் என்றநிலை அங்கு இல்லை. தேவைக்களவு நிலம் இருந்தது. அனைவரும் உழைத்தனர். விளைபொருளைச் சமமாகப் பகிர்ந்தளிக்கும்நிலை இருந்தது. அறிவுடைமைக்காக மட்டுமே பிறரிடம் இரக்கும் நிலை காணப்பட்டது. அறிவுக்கிரத்தல் அறமாகக் கருதப்பட்டது. என்பன பண்டிதர் அ.கி. நாயுடு அவர்களின் அறம்குறித்த கோட்பாடுகளாகத் திருவள்ளுவர் காவியத்தின்வழி புலனாகின்றனவாம்.

References

Krishnasamy Naidu, A. (1958) Thiruvalluvar Kaviyam, A.N. Press, Coimbatore, India

Swaminathaiyar, U.V.S. (1956) Purananooru Moolamum Uraiyum, Thiyagarasavilasa Veliiedu, Chennai, India

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

About the License

© The Author 2026. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

Cite this Article

V. Vignesh, The Concept of Virtue According to Pandithar A. Krishnasamy Naidu, Indian Journal of Multilingual Research and Development, Vol 7, Iss 4, (2026) 10-14. DOI: https://doi.org/10.54392/ijmrd2643